**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 57/2022**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குருசாமி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of May 27th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் காவல்துறை உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வில் இருக்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் தென்காசி காவல்நிலையத்தில் பயிற்சி உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, 30.05.2015ம் தேதி, காலை 08.30 மணியளவில் நானும், எனக்கு உதவியாக தலைமைக்காவலர் பாலகன், காவலர் சக்கீர் ஆகியோர் சகிதம் தென்காசி காவல்நிலைய எல்கைக்குட்பட்ட பகுதியில் குற்றங்கள் நடக்காமல் கண்காணித்து ரோந்து செய்து வந்தபோது, தென்காசி புதிய பஸ்நிலைய புறக்காவல்நிலையம் பின்புறம் சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்த பின்னால் ஊர், பெயர் கேட்டு தெரிந்து கொண்ட அம்பைத் தாலுகா, காக்கநல்லூர், தெற்கு தெருவைச் சேர்ந்த லெட்சுமணத்தேவர் மகன் மூக்காண்டி என்பவரை என்னுடன் வந்த காவலர் சக்கீர் என்பவர் விசாரிக்கும் போது, அவர் "நான் அம்பாசமுத்திரம் ஏரியாவில் பெரிய ரவுடி, போலீஸ்கார தேவடியா மவனே" என்று அசிங்கமாக பேசி, "என்னை எப்படி

விசாரிக்கலாம், அம்பாசமுத்திரம் ஏரியாவே என்னை பார்த்தாலே அங்குள்ளவர்கள் பயந்து ஒதுங்குவார்கள்" என்று பேசிக்கொண்டு, காவலர் சக்கீரை கீழே தள்ளி, காலால் மிதித்துக்கொண்டு, தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து "இத்தோடு செத்து தொலை ல" என்று கூறி கழுத்தில் குத்த முயன்றபோது நானும், என்னுடன் வந்த தலைமைக்காவலர் பாலகன் என்பவரும் மேற்படி மூக்காண்டியை தடுத்து, பிடிக்க முயன்றபோது "போலீசுனா பெரிய மயிரா" என்று அசிங்கமாக பேசி, அரசு பணியை செய்ய விடாமல் தடுத்து, கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியவரை பிடித்து, கத்தியுடன் காவல்நிலையத்திற்கு 09.00 மணிக்கு கொண்டு வந்து, நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க தனிஅறிக்கை கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் தனி அறிக்கை இது தான். அது அ.சா.ஆ.1. இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இந்த வழக்கில் காயத்துடன் யாரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல், யாராவது உண்மையில் தாக்கப்பட்டிருந்தால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய தனிஅறிக்கையில் எந்த பிரச்சனை சம்பந்தமாக ரோந்து சென்றேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 30.05.2015ம் தேதி, காலை 08.30 மணிக்கு போலீஸ் பார்ட்டிகள் சகிதம் ரோந்து சென்றதாக கூறுவது இது ஒரு பொய் வழக்கு என்பதை காண்பிக்கிறது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை யார் பதிவு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் கொடுத்த தனிஅறிக்கையின் அடிப்படையில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. சம்பவத்தில் யாரும் காயம் அடையவில்லை என்று நான் கூறியுள்ள நிலையில், முதல் தகவல்

அறிக்கையில் காவலர் சக்கீர் காயம் அடைந்து மருத்துவமனைக்கு சென்றதாக குறிப்பிட்டிருப்பது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய வாக்குமூலத்தில் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக, காயம் ஏற்படாத வழக்குகளில் எதிரிகள் மீது 307 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்வதில்லை என்றால் சரிதான். காலை 08.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றது. தனி அறிக்கையை நான் தான் கைப்பட எழுதினேன். தனிஅறிக்கையை நான் காவல்நிலையத்தில் வைத்து எழுதினேன். சம்பவயிடத்திலிருந்து காவல்நிலையம் வருவதற்கு 15 நிமிடங்கள் ஆகும். நாங்கள் இருசக்கரவாகனத்தில் எதிரியை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றோம். காவல்நிலையம் வந்தபிறகு, தனிஅறிக்கை தயார் செய்ய எனக்கு 10 நிமிடங்கள் ஆகியிருக்கும். நான் தனிஅறிக்கையை காலை 09.00 மணியளவில் கொடுத்தேன். முதல்தகவல்அறிக்கையில் புகார் கொடுத்த நேரம் 09.45 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி, ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றும், மேற்படி வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.05.27 17:06:05 +0530